DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case no: CC.No.75/2023**
**prosecution witness: Pw 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**A1, absent petition filed. A2 present**

வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணன் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**01.08.2023**
முதல் விசாரணை:-

1. நான் ஆத்தாங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் 2 வது எதிரியையும் மற்றொரு எதிரியையும் தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

1. போலீசார் விசாரணையில் கடந்த 01.08.2019-ம் தேதி 14.00 மணியளவில் அ.சா.1 வீட்டில் தனியக இருந்த போது 1 வது எதிரி அவரது வீட்டிற்கு சென்று அ.சா.1 ஐ பார்த்து அசிங்கமாக பேசி, கீழே தள்ளிவிட்டு, காலால் மிதித்து, சேலையை பிடித்து இழுத்தார் என்றால் சரியல்ல. அ.சா1.க்கு வலது பக்க மண்டையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதை பார்த்த நானும் நீதி என்பவரும் சம்பவத்தை பார்த்து விலக்கிவிட்டு சத்தம் போட்டு ஆட்டோவில் அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்றால் சரியல்ல. எதிரி போகம் போது அ.சா.1 ஐ பார்த்து கொலை மிரட்டல் விடுத்தர் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.